உ

சிவமயம்

ஸ்ரீ காசி விஸ்வேஸ்வரர் துணை.



ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மேலாண்மைக் கழகம்

4, சிவன் கோவில் மேல வீதி,

காரைக்குடி-623001

ஆண்டு அறிக்கை

27—1—89 உ வெளியிடப்பெற்றது.

Sri Kasi Nattukkottai Nagara Chatram Managing Society

ANNUAL REPORT.

நிர்வாக உறுப்பினர்கள்

தலைவர் :

திரு. உ. ராம. மெ. சுப. சேவு. அ. அண்ணுமலை செட்டியார்,
தேவகோட்டை.

உப தலைவர் :

திரு. RM முத்துப்பழநியப்ப செட்டியார், பாகனேரி. (மதுரை)

காரியதரிசி :

திரு. சுப. சண்முகம் செட்டியார், கண்டனூர். (திருச்சி)

உப காரியதரிசி :

திரு. RM. நாராயணன் செட்டியார், நாட்டரசன்கோட்டை. (சேலம்)

பொருளாளர் :

திரு. மெ. செ. ச. மு. மெ. முத்துராமன் செட்டியார், காரைக்குடி.

உறுப்பினர்கள் :

திரு. சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார், ஒக்கூர் (மதுரை)
,, SP S. மெய்யப்ப செட்டியார், தேவகோட்டை
,, RM. ரெங்கநாதன் செட்டியார், கருங்குளம். (கோயம்புத்தூர்)
,, சுப. சொ. சுப்பிரமணியன் செட்டியார், நாச்சியாபுரம்.
,, அ. ராம. தெ. அழ. தேனப்ப செட்டியார், பள்ளத்தூர்
,, அள. அரு. சோம. நாராயணன் செட்டியார், தேவகோட்டை
,, RM. பழநியப்ப செட்டியார், மேலச்சிவபுரி. (சேலம்)
,, A. K. A. CT AL. சிதம்பரம் செட்டியார், கோட்டையூர்
(சென்னை)
,, STAR. அருணசலம் செட்டியார், கண்டனூர். (திருச்சி)
,, பெரி. பழ. ராமசாமி செட்டியார், விராமதி.
,, SP. மணியன் செட்டியார், வலையபட்டி (கோயம்புத்தூர்)

கணக்கு தணிக்கையாளர் :

திரு. சொ. ராமனுதன் B. Com., FCA புதுக்கோட்டை

உ

சிவமயம்

ஸ்ரீ விசுவேசர் துணை



ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம்

மேலாண்மைக் கழகம் நிர்வாக சபை

ஆண்டறிக்கை

பிள்ளையார்

திருவாக்கும் ; செய்கருமம் கைகூட்டும்; செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்;— உருவாக்கும் ;
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை

- கபிலர்

முருகன்

முருகனே ! செந்திமுதல்வனே ! மாயோன்
மருகனே ! ஈசன்மகனே ! – ஒருகைமுகன்
தம்பியே ! நின்உடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

- நக்கீரர்

விசுவேசர் - விசாலாட்சி

இசைபாடி நாடனைத்தும்
ஏற்றிப் போற்ற
பசுபாசம் வாங்கிஅருள்
பரமன் ஆன
கசியாதார் மனத்தினையும்
கரைக்கும் காசி
விசுவேசர் விசாலாட்சி
விரைத்தாள் போற்றி

— இராய. சொ.

பேரன்பு சார்ந்த பிரதிநிதிகளே, பெரியோர்களே!

வணக்கம்.

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகப் பிரதிநிதிகளும் சிவநெறிச் செல்வர்களுமாகிய உங்களனை வரையும் நமது இந்தப் பொதுக் குழுக் கூட்டத்திற்கு வருக வருக வெனப் பணிவன்புடன் வரவேற்கிறோம்.

நமது அன்புக்குறியவர்களான நமது மேலாண்மைக் கழகத்தின் செயற்குழு உறுப்பினர்களாக பணியாற்றிய KVRM. மாணிக்கம் செட்டியார், பெரி. சித. லெட்சுமணன் செட்டியார், கண. மெ. நா. சொக்கலிங்கம் செட்டியார், கணக்கு தணிக்கையாளராக பணியாற்றிய TR. சொக்கலிங்கம் செட்டியார் ஆகியோரின் மறைவு நமது மேலாண்மைக் கழகத்திற்கு ஒரு பெரிய இழப்பாகும். அவர்கள் ஆற்றிய பணியைப் போற்றுகிறோம். அவர்கள் ஆத்மா சாந்திய அடைய எல்லாம் வல்ல விஸ்வேரப் பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

நமது கழகக்தின் நிர்வாகத்திலிருந்து வரும் அனைத்து ஸ்தலங்களிலும் நமது கால கால தர்மங்கள் செவ்வனே நடை பெற்று வருகின்றன என்பதை மிக மகிழ்வோடு முதற்கண் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ காசியில் ஸ்ரீ நகரேஸ்வரர் கோவிலிலும், ஸ்ரீ விசாலாட்சி கோவிலிலும் வழக்கம்போல் நித்தியப்படித்தர பூஜைகள் நன்கு நடைபெற்று வருகின்றன. ஸ்ரீ விஸ்வேஸ்வரர், ஸ்ரீ அன்னபூரணி, அம்மன் திருக்கோவில்களில் தினமும் மூன்று கால அபிஷேக ஆருதனைகள் "சம்போ" மூலம் இரு தடவைகளில் அனுப்பப் பெற்றுச் சிறந்த முறையில் வழக்கம்போல் நடைபெற்று வருகின்றன.

*15–5–84*ல் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் ரெங்கோன் நகர விடுதியிலும், ஸ்ரீ காசிச் சத்திரத்திலும், அதைச்சேர்ந்த கிளைச் சத்திரத்திரங்கள் அனைத்திலும் மராமத்து வேலைகள் செய்வதென்றும் அங்கங்கு தேவைக்குத் தகுந்தாற்போல் தங்கும் அறை

கள், குளியல் அறைகள், கழிவறைகள் கட்டுவதென்றும் தீர்மானிக்கப் பெற்றது. ரெங்கோன் நகர விடுதி மேல் வீட்டில் மூன்று தங்கும் அறைகளும், கீழ்வீட்டில் ஐந்து தங்கும் அறைகளும் புதிதாய் கட்டப்பெற்றன. ஏற்கனவே புழக்கத்தில் இருந்த பழைய ரூம்களை சீரமைப்பு செய்து புழக்கத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. ஆண்கள் உபயோகத்திற்காக, எட்டு கழிவறைகளை பழைய இடத்திலேயே சீரமைப்பு செய்து புதிதாய் தடுப்பு சுவர்கள் கட்டி, புதிதாய் கதவுகள் போட்டு புழக்கத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. பெண்கள் உபயோகத்திற்காக இரண்டு குளியல் அறைகளும், இரண்டு கழிவறைகளும் புதிதாய் கட்டியிருக்கிறது. கீழ்வீட்டில் ஏற்கனவே இருந்த குளியல் அறைகள் மூன்றையும் சீரமைப்பு செய்து அதற்குப் பக்கத்தில் காலியாக இருந்த இடத்தை குளியல் அறையாக மாற்றி அமைத்திருக்கிறது. மேல் வீட்டில் ஏற்கனவே கட்டப்பெற்று உபயோகத்தில் இல்லாதிருந்த குளியல் ஒன்றையும், கழிவறை ஒன்றையும் மராமத்து செய்து புழக்கத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. விடுதியில் மூன்றும் கட்டில் ஓட்டுக்கு மேல் சாந்து பூசியிருந்ததால் கனம் தாங்காமல் ஒரு பக்கத்து வாரம் சரிந்து நீண்டகாலமாக முட்டுக் கொடுத்து வைத்திருந்ததை அகற்றிவிட்டு பழுதடைந்திருந்த மரக்கைகளை மாற்றி புது மரக்கைகள் வாங்கிப் போட்டு வாரம் பூருவும் புது ஓடுகள் வாங்கிப்போட்டு சீரமைப்பு செய்திருக்கிறது மேல் வீட்டில் ஜன்னல் கதவுகள் எல்லாம் ரெம்ப பழுதடைந்து விட்டதால் அவைகளையெல்லாம் கழற்றி சீர் செய்து திரும்பப் பொருத்தியிருக்கிறது. இப்போது தங்கும் அறைகள் 13ம், குளியல் அறைகள் 7ம், கழிவறைகள் 11ம் எல்லா நவீன வசதிகளுடன் புழக்கத்தில் இருக்கின்றன.

சாமான்கள் வைப்பதற்கு ஏற்கனவே இருந்த 5 அறைகள் கொண்ட லாக்கர்கள் 4 போக மேற்கொண்டு மூன்று லாக்கர்கள் வாங்கியிருக்கிறது. ஒரு லாக்கருக்கு ஆர்டர் கொடுத்து இருக்கிறது. மேல் வீட்டில் பின் பக்க தார்சு ரெம்பப் பழுதடைந்து விட்டதால் புதிதாய் தார்சு போட்டிருக்கிறது. எலெக்ட்ரி வயர்கள் ரெம்பப் பழுதடைந்து வீட்டதால் எல்லா வயர்களையும் எடுத்து விட்டு புதிதாக (ரீ ஒயரிங்) வயர்கள் மாற்றி இருக்கிறது. ஹாலில் ஏற்-

கனவே இருந்த மின் விசிறிகள் இரண்டு போக மேற்கொண்டு இரண்டு மின் விசிறிகள் வாங்கிப் பொருத்தியிருக்கிறது. வறட்சி காலத்தில் கேணியில் தண்ணீர் இல்லாதிருந்ததால் கிணற்றுக்கு அடியில் நீண்ட துளை போட்டு மோட்டார் பொருத்தி இப்போது தண்ணீர் நிறைய கிடைக்கிறது. விடுதியில் டிஸ்ட்டெம்பர் அடித்தும், சீலிங் மரக்கைகளுக்கு வார்னீஸ் எண்ணேயும், கதவுகள், ஜன்னல்களுக்கு பெயிண்ட் அடித்தும் விடுதியை ரெம்ப நல்ல முறையில் பராமரிப்பு செய்து வைத்து இருக்கிறது. நகரத்தார் பெருமக்கள் ஆண், பெண் இருபாலரும் பெருமளவில் வந்து தங்கிச் செல்கிறார்கள். 12-4-84ல் மகமை லாக்கர் வாடகை வரவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 29406 ஆக இருந்தது. 12-4-88ல் ஆண்டு ஒன்றுக்கு ரூ 66577 ஆக வரவு உயர்ந்திருக்கிறது. வசதிகள் கூடச் செய்து கொடுத்திருப்பதால் வருவாயும் பெருமளவில் கூடி வருகிறது என்பதை மிக மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ காசி :- நமது சத்திரத்தில் யாத்திரைக் கட்டுக்கு மேலே உள்ள தார்சிலும் கீழே உள்ள ரூம்களிலும் வெடிவுகள் ஏற்பட்டு ரூம்களில் மழைத்தண்ணீர் கசிந்து எல்லா இடங்களிலும் மழைக் காலத்தில் எலெட்ரிக் ஷாக் இருந்து வந்தது. தார்சு ரூம்கள் எல்லாவற்றிலும் இருந்த வெடிவுகளை சீர் செய்தும் யாத்திரை கட்டில் உள்ள 14 ரூம்களுக்கும் சுவர்களில் ஏற்பட்டிருந்த பழுதுகளை சரிசெய்து புதிதாய் தரைகளில் சிமெண்ட் பூசி ரூம்களுக்கு டிஸ்டெம்பர் அடித்து கதவுகள் ஜன்னல்களுக்கு வர்ணம் வைத்தும் புதுப்பித்திருக்கிறது. ஸ்ரீ நகரேஸ்வரர் கோவிலுக்குப் பக்கத்திலிருக்கும் ரூம்கள் ரெண்டையும் சீரமைப்பு செய்து டிஸ்டெம்பர் அடித்து கதவு, ஜன்னல்களுக்கு வர்ணம் அடித்து இருக்கிறது. கழிவறைகள் அனைத்தையும் பழுது பார்த்திருக்கிறது. பைப்பு வசதி இல்லாத காலத்தில் ஒவ்வொரு கழிவறைக்கும் தண்ணீர் நிரப்பு வைப்பதற்காக சிறு சிமிண்ட் தொட்டி வைத்திருக்கிறார்கள் அதனால் கழிவறைகள் பெரும்பாலான இடத்தை அடைத்துக் கொண்டு சரியாய் உட்காரக் கூட வசதி இல்லாதிருந்தது. இப்போது ஒவ்வொரு கழிவறைக்கும் தனித்தனி தண்ணீர் குழாய்கள்

பொறுத்தி விட்டு அதிலிருந்த தொட்டியை வெளியில் எடுத்து வைத்திருக்கிறது. மேல் வீட்டில் குளியல் அறை, கழிவறை வசதியுடன் கூடிய நான்கு அறைகளும், அய்யர் ஹாலில் எட்டு சாதா அறைகளும் புதிதாய் கட்டியிருக்கிறது. மேல் வீட்டில் பெரிதும் பழுதடைந்திருந்த அறையை மருமத்து செய்து புதிதாய் சுவர் வைத்து மூன்று கதவுகள் போட்டு மூன்று அறைகளாக மாற்றி அமைத்திருக்கிறது. அய்யர் ஹாலிலும் திண்ணைப்பக்கத்திலும் இருந்த அறைகளை சீரமைப்பு செய்து புழக்கத்திற்கு கொண்டு வந்திருக்கிறது.

மேல் வீட்டில் உபயோகத்தில் இல்லாதிருந்த ஹால் ஒன்றில் புதிதாய் சிமிண்ட் தரைபோட்டு சுவற்றில் உள்ள பழுதுகளை சரிசெய்து டிஸ்டெம்பர், வர்ணம் அடித்து மின் விசிறிகள் வாங்கிப் பொருத்தி உபயோகத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. அன்ன பூரணி ஹால் அய்யர் ஹால் இரண்டையும் சீரமைப்பு செய்து டிஸ்டெம்பர், வர்ணம் அடித்து ஒவ்வொரு ஹாலுக்கும் இரண்டு மின் விசிறிகள் வாங்கிப் பொருத்தியிருக்கிறது. அய்யர் ஹாலில் ஏற்கனவே இருந்த ஒரு கழிவறை போக மேற்கொண்டு ஒரு குளியல் அறையும் கழிவறையும் புதிதாய் கட்டியிருக்கிறது. ஸ்ரீ காசிச் சத்திரத்தில் ஏற்கனவே யாத்ரீகர்கள் புழக்கத்தில் இருந்தது சாதாரண அறைகள் 14ம் குளியல் அறை. கழிவறை வசதியுடன் உள்ள அறைகள் 5ம் ஆக 19 அறைகள் இருந்தன. தற்போது யாத்ரீகர்கள் புழக்கத்தில் சாதா அறைகள் 27ம் குளியல் அறை, கழிவறை வசதியுடன் கூடிய அறை 9ம் ஆக 36 அறைகள் இருக்கின்றன. சத்திரத்தில் உள்ள மின்சாரக் கம்பிகள் ரெம்ப பழுதாகிவிட்டதால் எல்லா இடங்களிலும் ஷாக் வரத் தொடங்கியது எல்லா கம்பிகளையும் எடுத்துவிட்டு புது கம்பி (ரீ வயரிங்) போட்டிருக்கிறது. நகரேஸ்வரர் கோவிலிலும் புது மின்சாரக் கம்பிகள் பொருத்தி இருக்கிறது.

பாதாள ஈஸ்வரர் கோவில் :- கோவில் பூராவும் சுவர்களை கொத்தி விட்டு புதிதாய் பூசி, தரைகள் புதிதாய் சிமிண்ட் போட்டு சீலிங் புதிதாய் போட்டு மூலஸ்தானத்தில் மூன்று அடி உயரத்துக்கு

மார்பிள் கல் பதித்து சுவர்களுக்கு டிஸ்டம்பர் அடித்திருக்கிறது. அய்யர் ஹாலில் ரூம் கட்டுவதற்கு ஒரு ரூம்புக்கு ரூ. அய்யாயிரம் வீதம் வாங்கிக் கட்டி உள்ளோம்.

அய்யர் ஹால் ரூம் கட்ட ரூம் ஒன்றுக்கு ரூபாய் அய்யாயிரம் கொடுத்தவர்கள்.

1 கரு. கு. ம. மீ. மீனாட்சிசுந்தரம் செட்டியார், காரைக்குடி.
2 கரு. கு. ம. மீ. மீனாட்சிசுந்தரம் செட்டியார், காரைக்குடி.
3 சித. தே. பழ. தேனப்ப செட்டியார், கோட்டையூர்.
4 யோகி சா. ராமைய்யா செட்டியார், கானாடுகாத்தான்.
5 எஸ். அழகப்ப செட்டியார், காரைக்குடி.
6 ச. மெய்யப்ப செட்டியார், கடியாபட்டி.
7 KR. KT. கருப்பன்செட்டியார், காரைக்குடி.

மேல் வீட்டில் ரூம் கட்ட ரூம் ஒன்றுக்கு பதினாயிரம் வாங்கி உள்ளோம்.

மேல் வீட்டில் குளியல் அறை, கழிவறை வசதியுடன் ரூம் கட்ட ரூம் ஒன்றுக்கு ரூ. பதினாயிரம் கொடுத்தவர்கள்.

1 உ. ராம. மெ. சுப. சேவு. அ. அண்ணாமலை செட்டியார், தேவகோட்டை.
2 அ. சுப்பிரமணியன் செட்டியார். ராங்கியம்.
3 சுப. சித. பழநியப்ப செட்டியார், காரைக்குடி.
4 சித. முத்தம்மாள் ஆச்சி, ராம. சிதம்பரம் செட்டியார், கோ. லெட்சுமிபுரம்.

காசிச் சத்திரத்தில் மேல் வீட்டில் வராண்டாவில் பழுதடைந் திருந்த சிறு ரூமை மராமத்து செய்து குளியல் அறையாகவும், கழிவறைக்குப் பக்கத்தில் சிறுநீர் கழிப்பதற்காக இருந்த சிறு அறை யையும் ஹிட்டர் வசதியுடன் உள்ள குளியல் அறையாகவும் மாற்றி அமைத்திருக்கிறது. ஏற்கனவே இருந்ததைக் காட்டிலும் 17 தங்கும் அறைகள் கூடுதலாகி இருப்பதால் சத்திர வருவாயும் கணிசமான அளவு உயர்ந்திருக்கிறது. 12-4-84ல் மகமை அபிஷேக வரவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 46827 ஆக இருந்தது. 12-4-88ல் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 84305 ஆக உயர்ந்திருக்கிறது என்பதை மிக மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம். காசி நந்தவன சுவர்கள் பின் பக்கம் மழையில் விழுந்து விட்டதால்

புதிதாய் சுவர் எடுத்து அங்குள்ள லாட்ஜ் கட்டிடப் பக்கத்தில் இருந்து நந்தவனத்துக்குள் எல்லோரும் புழங்கிக் கொண்டு இருந்ததால் லாட்ஜுக்கும் நந்தவனத்துக்கும் இடையே இருந்த சிறு சுவரை உயர்த்தி வெளி ஆட்கள் யாரும் நந்தவனத்தில் நுழைய முடியாமல் செய்திருக்கிறது.

ஸ்ரீ காசி விசாலாட்சி அம்மன் கோவில்

கோவிலில் மராமத்து அனைத்தும் செய்து வர்ணம் வைத்துப் புதுப்பித்து எலக்ட்ரி ரீஒயரிங் செய்து குரோதன ஆண்டு கார்த்திகைத் திங்கள் 7ம் நாள் (22-11-85) வெள்ளிக்கிழமையன்று அருள்மிகு ஸ்ரீகாசிவிசாலாட்சியம்மன் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா வெகு சிறப்பான முறையில் நடைபெற்றது. அன்று தினம் சத்திரத்தில் நடைபெற்ற காலை, மதியம் விருந்தில் நகரத்தார் பெருமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பிரயாகை :- பிரயாகை சத்திரமும் அதனை அடுத்துள்ள யாத்திரைக் கட்டும் நீண்ட காலமாக பழுதடைந்திருந்தது. இப்போது சத்திரத்திலும், யாத்திரைக்கட்டிலும் ஏற்பட்டிருந்த வெடிவுகள் அனைத்தையும் சீர் செய்து தரைகளில் புதியதாய் சிமிண்ட் போட்டு சுவர்களில் டிஸ்டெம்பரும், கதவு, ஜன்னல்களில் வர்ணமும் பூசி இருக்கிறது. சத்திரத்தில் மூன்று கழிவறைகளும், ஒரு குளியல் அறையும், யாத்திரைக் கட்டில் இரண்டு கழிவரையும், ஒரு குளியல் அறையும் புதிதாய் கட்டியிருக்கிறது. மின்சாரக் கம்பிகள் மிகவும் பழுதாகி விட்டதால் அவைகளை எடுத்து விட்டு புதிய கம்பிகள் (ரீ ஒயரிங்) பொருத்தி இருக்கிறது. எல்லா வசதியும் இப்போது செய்திருப்பதால் நகரத்தார்கள் பிரயாகையில் இரங்கி ஸ்னானம் செய்து விட்டு அன்று தினமோ மறு தினமோ காசிக்குச் செல்கிறார்கள்.

அயோத்தியா : சத்திரத்தில் உள்ள மூன்று கட்டுகளிலும் ஏற்பட்டிருந்த வெடிப்புகளை சீர் செய்து வெள்ளை அடித்து நகரத்தார் ஹாலில் நவீன கழிப்பறைகள் மூன்றும், குளியல் அறை ஒன்றும் புதிதாய் கட்டியிருக்கிறது. நகரத்தார் ஹாலில் மின் விசிறி ஒன்று

வாங்கி பொருத்தியிருக்கிறது. பெரும் கூட்டம் போகும் போது ஒரே பைப்பில் தண்ணீர் வருவது போருதிருந்ததால் நகரத்தார் ஹாலில் உள்ள தண்ணீர் தொட்டிக்கு தனி பைப் கனெக்சன் வாங்கி இருக்கிறது. இனி தண்ணீர் விடும்போது தொட்டியில் நிரப்பிக் கொள்ளலாம். தண்ணீர் பிரச்னை இனிமேல் நமக்கு இருக்காது.

கெயா : நமது சத்திரங்களிலே அ தி க ம ா ன பழுதடைந்தது கெயாச் சத்திரம் தான். கட்டிடம், சுவர், தார்சு பூராவும் வெடிப்பு ஏற்பட்டு விட்டது. மழைகாலம் பூருவும் மழைத் தண்ணீர் ஒழுகி அதனுல் மரக்கைகள் அனைத்தும் நீண்ட காலமாக பழுதடைந்திருந் தன. இரண்டு கட்டிடமும் ஒரே மாதிரியான பெரிய க ட் டி ட ம் இப்போது கட்டிடம் பூ ரு வி லு ம் ஏற்பட்டிருந்த வெடிவுகளை சீர் செய்து முன் வாரத்தில் பழுதடைந்த மரக்கைகள், ஓடு பூ ரு வு ம் பிரித்து விட்டு பழுதடைந்தற்கு பதில் புதிய மரக்கைகளும், ஓடு களும் மாற்றி சுவர்களுக்கு டிஸ்டெம்பரும், மரக்கைகளுக்கு வார்னீசும், கதவு, ஜன்னல்களுக்கு வர்ணமும் அடித்திருக்கிறது. இரண்டு கட்டிலும் ஒவ்வொரு கட்டுக்கும் இரண்டு நவீன கழிவறைகளும், ஒரு குளியல் அறையும் புதிதாய் கட்டி இருக்கிறது... இப்போது கட்டிடம் பார்க்க ரெம்ப அழகாக இருக்கிறது.

காரைக்குடி : கல்வி, திருமண உதவி செய்வதற்கு செயற்குழு பரிந்துரைத்தற்கு 28-10-85உ நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப் பெற்றது.

திருமண நிதி உதவி : திருமணம் ஒன்றுக்கு ரூ. 3500/- வீதம் குரோதன வருடத்தில் திருமண நிதி வழங்கிய விபரம்.

1. மணமகள் : ராங்கியம் சி. பெரி. பெரியகருப்பஞ் செட்டியார் மகள் ஏகம்மை என்ற யோகேஸ்வரி
   மணமகன் : கொப்பனுபட்டி பி. மெ. பழ. மு. பழநியப்ப செட்டியார் மகன் பழநியப்பன் என்ற சுப்பிரமணியன்
   திருமண நாள் : குரோதனஞ தைமீ 9உ (22-1-86)

2. மணமகள் : கண்டரமாணிக்கம் சி. மெ. தேனப்ப செட்டியார் மகள் விசாலாட்சி
   மணமகன் : கீழச்சிவல்ப்பட்டி நா. கி. நா. கிருஷ்ணப்ப செட்டியார் மகன் நாராயணன்
   திருமண நாள் : குரோதனஞ தைமீ 13உ (26-1-86)

3. மணமகள் : கடியாபட்டி விஸ்வநாதபுரம் சா. அ. பழநியப்ப செட்டியார் மகள் ராதா
   மணமகன் : கோ. அழகாபுரி சு. பெரி. மு. அ. முத்துராமன் செட்டியார் மகன் அண்ணாமலை
   திருமண நாள் : குரோதனஞ தைமீ 28உ (10-2-86)

4. மணமகள் : கோட்டையூர் L. R. M. லெட்சுமணன் செட்டியார் மகள் மீனு என்ற கலா
   மணமகன் : நேமத்தான்பட்டி பெரி. வீர. சுப. சுப்பிரமணியன் செட்டியார் மகன் சாத்தப்பன்
   திருமண நாள் : குரோதனஞ தைமீ 30உ (12-2-86)

5. மணமகள் : நேமத்தான்பட்டி வீர. சொக்கலிங்கம்செட்டியார் மகள் நாச்சம்மை
   மணமகன் : காரைக்குடி மு. கரு. பழ. வீரப்ப செட்டியார் மகன் முத்து அருணாசலம்
   திருமண நாள் : குராதனஞ பங்குனிமீ 4உ (17-3-86)

6. மணமகள் : தேவகோட்டை M. சுப்பிரமணியன் செட்டியார் மகள் வள்ளியம்மை

மணமகன் : தேவகோட்டை பழ. சுப்பிரமணியன் செட்டியார் மகன் பெரியகருப்பன் என்ற மாணிக்கவாசகம்

திருமண நாள் : குரோதனஹூ பங்குனிமீ 4உ (17-3-86)

7. மணமகள் : சொக்கலிங்கம் புதூர் AR. மாணிக்கம் செட்டியார் மகள் பெரியநாயகி

மணமகன் : கண்டனூர் N. வீரப்ப செட்டியார் மகன் பழநியப்பன்

திருமண நாள் : குரோதனஹூ பங்குனிமீ 31உ (13-4-86)

அட்சய வருடத்தில் திருமண நிதி வழங்கிய விபரம்.

1. மணமகள் : நாச்சியாபுரம் வயி. கண. பழநியப்ப செட்டியார் மகள் மீனாட்சி

மணமகன் : நாச்சியாபுரம் மெ. நா. அண. அண்ணாமலை செட்டியார் மகன் சோமசுந்தரம்

திருமண நாள் : அட்சயஹூ சித்திரைமீ 3உ (16-4-86)

2. மணமகள் : கோனாபட்டு லெ. ரெங்கநாதன் செட்டியார் மகள் விசாலாட்சி என்ற கமலா

மணமகன் : கண்டனூர் பெ. ப. வெ. பழ. சிதம்பரம் செட்டியார் மகன் சொக்கலிங்கம்

திருமண நாள் : அட்சயஹூ சித்திரைமீ 17உ (30-4-86)

3. மணமகள் : கோ. அழகாபுரி AL. அழகப்ப செட்டியார் மகள் கல்யாணி

மணமகன் : தேவகோட்டை M. பெரிச்சியப்ப செட்டியார் மகன் பெரிச்சியப்பன்

திருமண நாள் : அட்சயஹூ சித்திரைமீ 28உ (11-5-86)

4. மணமகள் : கண்டரமாணிக்கம் நா. சி. நா. சின்னான் செட்டியார் என்ற கோவிந்தன் செட்டியார் மகள் சிட்டாள்

மணமகன் : பி. அழகாபுரி லெ, சா. சாமிநாதன் செட்டியார் மகன் சோமசுந்தரம்

திருமண நாள் : அட்சயஹூ சித்திரைமீ 29உ (12-5-86)

5. மணமகள் : நற்சாந்துப்பட்டி ந. பழ. நாச்சியப்ப செட்டியார் மகள் உண்ணுமலை என்ற தமிழரசி

மணமகன் : கொப்பனுபட்டி ந. வே. முருகப்ப செட்டியார் மகன் சண்முகம்

திருமண நாள் : அட்சயஹு வைகாசிமீ 1உ (15-5-86)

6. மணமகள் - பூலாங்குறிச்சி அரு. ராம. வள்ளியப்ப செட்டியார் மகள் மீனுள்

மணமகன் : கீழச்சிவல்ப்பட்டி சித. வெ. சொக்கலிங்கம் செட்டியார் மகன் வெள்ளையப்பன்

திருமண நாள் : அட்சய வருடம் வைகாசி மீ 8உ(22-5-86)

7. மணமகள் : கீழப்பூங்குடி N. லெட்சுமணன் செட்டியார் மகள் கண்ணுத்தாள்

மணமகன் : பாகனேரி லெ. சோமசுந்தரம் செட்டியார் மகன் சுப்பிரமணியன்

திருமண நாள் : அட்சய வருடம் வைகாசி மீ 14 உ (28-5-86)

8. மணமகள் : கானுடுகாத்தான் அ- ராமனுதன் செட்டியார் மகள் கல்யாணி

மணமகன் : காரைக்குடி மெ. செ. மெ. ஜெயங்கொண்டான் செட்டியார் மகன் சுப்பிரமணியன்

திருமண நாள் : அட்சய வருடம் வைகாசி மீ 14உ(28-5-86)

9. மணமகள் : நற்சாந்துபட்டி சா. சித. மு. சிதம்பரம் செட்டியார் மகள் பெரியாள் என்ற லதா

மணமகன் : நற்சாந்துபட்டி குழ. குமரப்ப செட்டியார் என்ற சுந்தரம் செட்டியார் மகன் சின்னையா

திருமண நாள் : அட்சய வருடம் ஆவணிமீ 29உ (14-9-86)

10. மணமகள் : துலாவூர் மடம் நகரத்தார் பெண்கள் குரு ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய ஞானப்பிரகாச குருக்கள் மகள் சாந்தா

மணமகன் : மூங்கில்ப்பட்டி திரு தை. வைத்தியலிங்க தேசிகர் குமாரன் மாணிக்கம்

திருமண நாள் : அட்சய வருடம் ஆனி மீ 13உ (27-6-86)

பிரபவ வருடத்தில் திருமண நிதி வழங்கிய விபரம்.

1. மணமகள் : தேவகோட்டை சி. க. சி. ராம. சோம. சுப்பிரமணியன் செட்டியார் மகள் தெய்வானை

மணமகன் : தேவகோட்டை வ. பெரி. சி. ராம. பெரி. இராமனுதன் செட்டியார் மகன் கணேசன் என்ற பெரியகருப்பன்

திருமண நாள் : பிரபவஸு சித்திரைமீ 27உ (10–5–87)

2. மணமகள் : நடராஜபுரம் சாத. சாத்தப்ப செட்டியார் மகள் வள்ளியம்மை

மணமகன் : கடியாபட்டி ராமச்சந்திரபுரம் அரு. லெட்சுமணன்செட்டியார் மகன் சுப்பிரமணியன்

திருமண நாள் : பிரபவஸு சித்திரைமீ 27உ (10-5-87)

3. மணமகள் : ஆ. தெக்கூர் ராம. குமரப்ப செட்டியார் மகள் இராமாயி என்ற மீனுட்சி

மணமகன் : வேகுப்பட்டி அ. பெரி. அண்ணுமலை செட்டியார் மகன் இராமலிங்கம்

திருமண நாள் : பிரபவஸு வைகாசிமீ 10உ (24-5-87)

4. மணமகள் : காரைக்குடி ரெங்க லெட்சுமணன் செட்டியார் மகள் மஹாலெட்சுமி

மணமகன் : காரைக்குடி தி. அ. சுப. வெ. பழநியப்ப செட்டியார் மகன் வெங்கிடாசலம்

திருமண நாள் : பிரபவஸு வைகாசிமீ 31உ (14-6-87)

5. மணமகள் : அரிமளம் செ. முத்துச் செட்டியார் மகள் வள்ளியம்மை என்ற சாந்தி

மணமகன் : பலவான்குடி நா. திரு. வெ. வெங்கிடாசலம் செட்டியார் மகன் சுப்பிரமணியன்

திருமண நாள் : பிரபவஸு வைகாசிமீ 31உ (14-6-87)

6. மணமகள் : நற்சாந்துப்பட்டி கும. மு. சோம. முருகப்ப செட்டியார் மகள் கல்யாணி என்ற கலா

மணமகன் : வேகுபட்டி கரு. பழ. பெரியகருப்பஞ்செட்டியார் மகன் பழநியப்பன்

திருமண நாள் : பிரபவஸு வைகாசிமீ 31உ (14-6-87)

7. மணமகள் : மிதிலைப்பட்டி மது. கதிரேசன் செட்டியார் மகள் சொர்ணவள்ளியம்மை

மணமகன் : கண்டரமாணிக்கம், ஆ. வி. மு. மெ. மெய்யப்ப செட்டியார் என்ற காசிச் செட்டியார் மகன் முத்தழகப்பன்

திருமண நாள் : பிரபவஹு ஆவணிமீ 29உ [13-7-87]

8. மணமகள் : தேவகோட்டை அ. வெ. மு. கணேசன் செட்டியார் மகள் செல்லம்மை

மணமகன் : தேவகோட்டை அரு. சிதம்பரம் செட்டியார் மகன் வெங்கிடாசலம் என்ற அருணாசலம்

திருமண நாள் : பிரபவஹு ஆவணிமீ 3உ (19-8-87)

9. மணமகள் : கல்லல் L. சோமசுந்தரம் செட்டியார் மகள் வள்ளிக்கண்ணு

மணமகன் : நாட்டரசன்கோட்டை சித. அருணாசலம் செட்டியார் மகன் பழநியப்பன்

திருமண நாள் : பிரபவஹு ஆவணிமீ 19உ (4-9-87)

10. மணமகள் : காரைக்குடி சுப சித. சுப்பிரமணியன் செட்டியார் மகள் சிவகாமி

மணமகன் : காரைக்குடி பெரி. அ. அ. அடைக்கப்ப செட்டியார் மகன் மெய்யப்பன்

திருமண நாள் : பிரபவஹு ஆவணிமீ 19உ (4–9–87)

11. மணமகள் : காரைக்குடி அழ. அ. ராமனாதன் செட்டியார் மகள் அழகம்மை

மணமகன் : புதுவயல் ராம. பழநியப்ப செட்டியார் மகன் ராமசாமி

திருமண நாள் : பிரபவஹு ஆவணிமீ 22உ (7-9-87)

12. மணமகள் : வேந்தன்பட்டி N. பழநியப்ப செட்டியார் மகள் விஜயலெட்சுமி

மணமகன் : கண்டனூர் பெ. ப. வெ. பழ. சிதம்பரம் செட்டியார் மகன் முத்துக்கருப்பன் என்ற கண்ணன்

திருமண நாள் : பிரபவஹு ஆவணிமீ 26உ [11-9-87]

13. மணமகள் : ஆவினிப்பட்டி அ. கரு. வள்ளியப்ப செட்டியார் மகள் முத்தாத்தாள்

மணமகன் : அரிமளம் AN. முத்துச்செட்டியார் மகன் அண்ணுமலே

திருமண நாள் : பிரபவ வருடம் ஐப்பசிமீ 22உ [8-11-87]

14. மணமகள் : கண்டரமாணிக்கம் லெ. ராமன் செட்டியார் மகள் உமா

மணமகன் : ஒ. சிறுவயல் சுப்பிரமணியன் செட்டியார் மகன் கண்ணன்

திருமண நாள் : பிரபவ வருடம் ஐப்பசிமீ 15உ (1-11-87)

15. மணமகள் : கடியாபட்டி விஸ்வணுதபுரம் S. பெரியகருப்பன் செட்டியார் மகள் நல்லம்மை

மணமகன் : காரைக்குடி வெ. சிதம்பரம் செட்டியார் மகன் வெங்கிடாசலம்

திருமண நாள் : பிரபவ வருடம் பங்குனிமீ 22உ (4-4-88)

இலவச கல்வி உதவி : பிளஸ்-2 படிக்கும் மாணவ மாணவிகளுக்கு ஒவ்வொரு மாணவ மாணவிக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100/- வீதம் இலவச கல்வி நிதி வழங்கிய விபரம்.

1	பழ. மெய்யம்மை	காரைக்குடி
2	பழ. வீரப்பன்	,,
3	K. ஜெயந்தி	காஊயார் மங்கலம்
4	PL. சுப்பிரமணியன்	விரையாச்சிலே
5	PL. புவனேஸ்வரி	சிறுகூடற்பட்டி
6	M. விசாலாட்சி	கோ. அழகாபுரி
7	N. மீனுட்சி	ஆ. முத்துப்பட்டணம்
8	A. மீனுட்சி	வேந்தன்பட்டி
9	PT. ராஜன்	ஆத்தங்குடி
10	அண. வள்ளியம்மை	அலவாக்கோட்டை
11	மா. சிட்டு மீனுள்	கண்டவருயன்பட்டி
12	L. நாராயணன்	ஒக்கூர்
13	SP. சுபராஜேஸ்வரி	மேலேச்சிவபுரி

இலவச கல்வி உதவி, தையல் பயிலுவதற்கு ஒவ்வொரு மாணவிக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 200/- வீதம் இலவச நிதி உதவி வழங்கிய விபரம்

1. RM. சிட்டாள் காரைக்குடி
2. M. சரோஜா தேவகோட்டை
3. S. காவேரி தேவகோட்டை
4. M. அலமேலு ஆத்தங்குடி
5. R. மெய்யம்மை கண்டனூர்
6. AL. உமா கண்டனூர்
7. V. லெட்சுமி கண்டனூர்
8. கண. மீனாள் தேவகோட்டை
9. C. தெய்வானை புதுவயல்
10. கும. விசாலாட்சி புதுவயல்
11. S. சிவகாமி பள்ளத்தூர்
12. சொ. உமையாள் கண்டனூர்

இலவச கல்வி உதவி, டைப்ரைட்டிங் பயிலுவதற்கு ஒவ்வொரு மாணவிக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 200/- வீதம் இலவச நிதி உதவி வழங்கிய விபரம்

1. K. மீனாள் குளிபிறை
2. M. காவேரி குளிபிறை
3. K. பார்வதி நற்சாந்துபட்டி
4. KR. சோலைச் செல்வி அரிமளம்
5, KR. உமாபெரியநாயகி காரைக்குடி
6. மு. உமா தேவகோட்டை
7. சித. மீனாச்சி காரைக்குடி
8. RM. லதா காரைக்குடி
9. SP. மீனாட்சி குளிபிறை

இலவச கல்வி உதவி - பட்டப் படிப்பு படிக்கும் மாணவிகளுக்கு ஒவ்வொரு மாணவிக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 400/- வீதம் இலவச நிதி உதவி வழங்கிய விபரம்

1. PL. மெய்யம்மை காரைக்குடி
2. T. நாச்சம்மை காரைக்குடி
3. பழ. சித்ரா நேமத்தான்பட்டி
4. RM. மீனாள் தேவகோட்டை
5. TR. ஜெயந்தி கீழச்சிவல்ப்பட்டி
6. மா. மீனாட்சி சிறுகூடற்பட்டி
7. T. மீனாட்சி தேவகோட்டை
8. RM. விஜய லெட்சுமி தேவகோட்டை
9. SVP, செல்வி தேவகோட்டை
10. MR. முத்து கானாடுகாத்தான்
11. VR. சித்ரா நாட்டரசன் கோட்டை
12. V. அழகம்மை வேந்தன்பட்டி
13. A. நாச்சம்மை ஆ. தெக்கூர்
14. RM. மீனாட்சி தேவகோட்டை

வலையபட்டி T. ராமுவுக்கு ஊமைப் பயிற்சியில் தொழிற் கல்வி கற்பதற்கு ரூ. 300/- இலவச கல்வி உதவியாக வழங்கப் பெற்றது.

இலவச கல்வி உதவி பிரபவ ஆண்டில் பிளஸ்-2 படிக்கும் மாணவ, மாணவி களுக்கு ஒவ்வொரு மாணவ மாணவிக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100/- வீதம் இலவச கல்வி உதவி வழங்கிய விபரம்

1. PR. பழநியப்பன் ஆத்தங்குடி
2. SP. லெட்சுமி கண்டரமாணிக்கம்
3. சுப. கலைச்செல்வி ஆ. தெக்கூர்
4. S. தெய்வானை கொப்பனாபட்டி
5. KR. சோலைச்செல்வி அரிமளம்
6. ஜெயந்தி என்ற மீனாள் நாட்டரசன் கோட்டை
7. RM. மீனாட்சி தேவகோட்டை

இலவச கல்வி உதவி – தையல் பயிலும் ஒவ்வொரு மாணவிக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ 200/– வீதம் இலவச கல்வி நிதி வழங்கிய விபரம்

1. S. மெய்யம்மை அரியக்குடி
2. RM. சிட்டாள் காரைக்குடி
3. மூ. சாந்தி மானகிரி

இலவச கல்வி உதவி - டைப்ரைட்டிங் பயிலும் மாணவிக்கு ரூ. 200/- வீதம் இலவச கல்வி நிதி வழங்கிய விபரம்

1. RM. லதா காரைக்குடி

இலவச கல்வி உதவி - பட்டப்படிப்பு படிக்கும் ஒவ்வொரு மாணவிக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ 400/- வீதம் இலவச கல்வி நிதி வழங்கிய விபரம்

1. S. சுபாராஜேஸ்வரி கடியாபட்டி
2. M. மேகலா கோனுபட்டு
3. S. பரமேஸ்வரி மேலைச்சிவபுரி
4. A. நாச்சம்மை ஆ. தெக்கூர்
5. A. மீனாட்சி வேந்தன்பட்டி
6. RM. சாத்தம்மை காரைக்குடி
7. SVP. செல்வி தேவகோட்டை
8. S. மீனாள் பள்ளத்தூர்
9. மா. சிட்டு மீனாள் கண்டவராயன்பட்டி
10. M. விசாலாட்சி கோ. அழகாபுரி
11. மா. மீனாட்சி சிறுகூடற்பட்டி
12. TR. முத்து குழிபிறை
13. MR. முத்து கானாடுகாத்தான்
14. RM. விஜயலெட்சுமி தேவகோட்டை
15. ஆ. உமா ஆவினிப்பட்டி
16. ராம. மெய்யம்மை வேந்தன்பட்டி
17. T. நாச்சம்மை காரைக்குடி
18. T. மீனாட்சி தேவகோட்டை

திருப்பித் தரும் கல்வி கடனுதவி

அட்சய ஆண்டில் என்ஜினியரிங் டிப்ளமொ படிக்கும் மாணவ மாணவி களுக்கு ஒவ்வொருவருக்கும் திருப்பித் தரும் கடன் உதவியாக ரூ. 400/- வழங்கிய விபரம்

1 KL. பழநியப்பன் கிழச்சிவல்பட்டி
2 N. சாத்தப்பன் ,,
3 S. குமரன் வலையப்பட்டி
4 N. சொக்கலிங்கம் சிறுகூடற்பட்டி
5 ப. செல்வமணி நாச்சியாபுரம்
6 V. சுப்பிரமணியன் சிறுகூடற்பட்டி
7 PL. அழகு உமையாள் அலவாக்கோட்டை
8 சொ. முத்துக்கருப்பன் காரைக்குடி
9 A. ராமனுதன் ஒ. சிறுவயல்
10 U. சிதம்பரம் இராமச்சந்திரபுரம்
11 T. சுப்பிரமணியன் பட்டமங்கலம்
12 AN. முத்தையா காரைக்குடி
13 RM. லெட்சுமி கண்டனூர்
14 CT. சிவகாமி கொத்தமங்கலம்
15 சொ. சிதம்பரம் அரிமளம்
16 ராம. பழநியப்பன் அரிமளம்

B. E. படிக்கும் மாணவர் இருவருக்கும் ரூ. 500/- திருப்பித் தரும் கடன் உதவி வழங்கிய விபரம்

1 C. பூங்குன்றன் நடராஜபுரம்
2 S. கிருஷ்ணன் வலையபட்டி

டீச்சர் டிரெய்னிங் படிக்கும் மாணவி ஒருவருக்கும் ரூ. 400/- வீதம் திருப்பித் தரும் கடன் உதவி வழங்கிய விபரம்

1 AL. அழகம்மை கல்லல்

பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் திருப்பித் தரும் கடன் உதவியாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 400/- வீதம் வழங்கிய விபரம்

1 C. வெங்கடாசலம் காரைக்குடி
2 லெ. முருகன தேவகோட்டை
3 சோமசுந்தரம் நாட்டரசன்கோட்டை
4 N. பழநியப்பன் காரைக்குடி
5 ச. காசிவிஸ்வநாதன் மேலைச்சிவபுரி

திருப்பித் தரும் கல்வி கடன் உதவி

பிரபவ ஆண்டில் என்ஜினியரிங் டிப்ளமொ படிக்கும் மாணவ மாணவிகளுக்கு ஒவ்வொருவருக்கும் திருப்பித்தரும் கடன் உதவியாக ரூ. 400/- வீதம் வழங்கிய விபரம்

1 M. சுந்தர் பழநியப்பன் கொ. லெட்சுமிபுரம்
2 PL. வீரப்பன் புதுவயல்
3 RM. சுப்பிரமணியன் அரிமளம்
4 பழ. அழகு உமையாள் அலவாக்கோட்டை
5 சித. ராமு மிதிலைப்பட்டி
6 T. பழநியப்பன் பொ. புதுப்பட்டி
7 R. ராமசுப்பிரமணியன் மேலைச்சிவபுரி
8 N. சாத்தப்பன் கீழச்சிவல்ப்பட்டி
9 N. சொக்கலிங்கம் சிறுகூடற்பட்டி
10 சித மணிகண்டன் காரைக்குடி
11 V பழநியப்பன் புதுவயல்
12 M. மீனுட்சிசுந்தரம் கண்டரமாணிக்கம்
13 C. முத்துக்கருப்பன் காரைக்குடி
14 PL. சுவாமிநாதன் கீழச்சிவல்பட்டி
15 MR. பழனியப்பன் காரைக்குடி
16 S. சோமசுந்தரம் தேவகோட்டை
17 RM. சரவணன் அரியக்குடி
18 U. சிதம்பரம் கடியாபட்டி

B. E. படிக்கும் மாணவர் இருவருக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 500/- வீதம் திருப்பித் தரும் கடன் உதவியாக வழங்கப்பெற்றது.

1 M. அண்ணுமலை காரைக்குடி
2 T. நாராயணன் சிராவயல்

பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 400- வீதம் திருப்பித்தரும் கடன் உதவியாக வழங்கப் பெற்றது.

1 T. சிதம்பரம் பள்ளத்தூர்
2 சு. சோமசுந்தரம் நாட்டரசன்கோட்டை
3 M. சண்முகம் காரைக்குடி
4 V. பழனியப்பன் கல்லல்
5 சிவ. ராமநாதன் கோனுபட்டு
6 PR. N. பெரியகருப்பன் நேமத்தான்பட்டி
7 S. காசிவிஸ்வநாதன் மேலைச்சிவபுரி
8 M. கணேசன் நெற்குப்பை
9 லெ. பத்மனுபன் கீழப்பூங்குடி

தொழிற் கல்வி பயிலும் மாணவிகளுக்கு ஒவ்வொருவருக்தும் ரூ 400/- வீதம் திருப்பித் தரும் கடன் உதவியாக வழங்கப்பெற்றது.

1 M. வெங்கடலெட்சுமி பட்டமங்கலம்
2 சுப. லெட்சுமி கல்லல்
3 VR. சித்ரா நாட்டரசன்கோட்டை
4 அழ. லெட்சுமி மானகிரி
5 S. பொன்னழகு நேமத்தான்பட்டி
6 KR. தேன்மொழி கீழச்சிவல்பட்டி
7 PL. சித்ரா நேமத்தான்பட்டி

திருமண நிதி உதவியாக குரோதன ஆண்டில் ரூ 24500/-ம் அட்சய ஆண்டில் ரூ 35000/-ம், பிரபவ ஆண்டில் ரூ. 52500/ம் ஆக ரூ. 1,12000/- கொடுத்துள்ளோம்.

இலவச கல்வி உதவியாக அட்சய ஆண்டில் ரூ 11400 / ம் பிரபவ ஆண்டில் ரூ 8300 / ம் ஆக ரூ 20100 / கொடுத்திருக்கிறோம். திருப்பித்தரும் கல்வி கடன் உதவியாக அட்சய ஆண்டில் ரூ 9800 / ம் பிரபவ ஆண்டில் ரூ 14600 / ம் ஆக ரூ 24400 / கொடுத்திருக்கிறோம்.

நமது அலுவலகத்திற்கு கட்டிடம் ஒன்றுகட்டுவதற்காக காரைக்குடி நகரச்சிவன் கோவிலுக்குச் சொந்தமான கிணற்றடி காளி அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள இடத்தை வாடகை ஒப்பந்தம் பேரில் ஒப்புக்கொண்டிருக்கிறது. புதிய செயற்குழு புதிய கட்டிடம் கட்ட ஆவன செய்ய வேண்டுகிறோம்.

12-4-84ல் பாங்குகளில் இருப்பு		ரூ	1099752-44
கிளைச்சத்திரங்களில்	ரொக்க இருப்பு	ரூ	12516-73
	மொத்தம் இருப்பு	ரூ	1112269-17
12-4-88 பாங்குகளில் இருப்பு		ரூ	1426076-16
கிளைச் சத்திரங்களில்	ரொக்க இருப்பு	ரூ	14515-92
	மொத்தம் இருப்பு	ரூ	1440592-08

நன்றி: எமது அழைப்பிற்கு இணங்கி இப்பொதுக்குழுக் கூட்டத்துக்கு வருகை தந்திருக்கும் நமது பிரதிநிதிகளுக்கும் காரைக்குடியில் நமது அலுவலகத்திற்கு இடம் தந்துதவிவரும் காரைக்குடி ஹிந்துமதாபிமான சங்கத்தாருக்கும் நமது கணக்குகளை தணிக்கை செய்து தந்துவரும் புதுக்கோட்டை ஆடிட்டர் திரு, சொ. ராமனாதன் அவர்கட்கும் நமது கூட்டங்களை கோவிலூர் மடாலயத்தில் நடத்திக்கொள்ள அன்புடன் இடம் தந்துள்ள நமது வணக்கத்திற்குரிய நமது குரு மஹா சந்நிதானம் அவர்கட்கும் அக்கூட்டங்களில் கலந்து கொள்ள வரும் நம் நகரத்தார் பெருமக்களை நமது சார்பில் இன் முகத்துடன் வரவேற்று,

இன்னமுதளித்து அன்புடன் உபசரித்து வருகின்ற நமது ஆண்டவர் மன்ற செயலர் ஸ்ரீ மெ. செ. ச. மு. மெ. முத்துராமன் செட்டியார் அவர்களுக்கும் சிறப்பாக நமது பல்வேறு தலங்களில் நிகழ்ந்து வருகின்ற கால கால தர்மங்கள் அனைத்தும் வழுவாது நடத்தி வர பூவும் பொன்னும் பொருளும் அன்பும் அருளும் தொடர்ந்து நல்கிவரும் நகரத்தார் பெருமக்களுக்கும் மேலும் நமது கழக மேம்பாட்டுக்காக பல்வகைகளிலும் பேருதவிகள் புரிந்து வரும் சிவசீலர்கட்கும் நமது செயற் குழுவின் சார்பிலே எங்கள் உள்ம்களிந்த நன்றியைப் பணிவன்புடன் சமர்ப்பித்துக் கொள்கிறோம்.

எம்மோடு ஒத்துழைத்த அனைத்து நம் கிளை மேலாளர்கள், பிற பணியாளர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்,

காரைக்குடி,
27—1—1989 }

சுப. சண்முகம்

ஸ்ரீ நகரேஸ்வரர் கோவிலில் உற்சவம் நடத்திவரும் உபயதாரர்களின் விபரம் ருத்ரோத்காரி வருடம்

1 பிரதோஷ உற்சவம் :
பிரதோஷம் தோறும் பிரதோஷ விநாயகர் ரிஷப வாகனத்தில் எழுந்தருளல் :
வேகுப்பட்டி, சேதுபழநியப்ப செட்டியாா

2 சதுர்த்தி உற்சவம் : சதுர்த்தி தோறும் ஸ்ரீ விநாயகர் பெருச்சாளி வாகனத்தில் எழுந்தருளல் : இளையாத்தங்குடி கோவில் ஒக்கூர் நகரத்தார்.

3 கார்த்திகை உற்சவம் : ஸ்ரீ சுப்பிரமணியர் வள்ளி, தெய்வானை யுடன் வெள்ளி மயில் வாகனத்தில் எழுந்தருளல் :
காரைக்குடி அ அள. அழகப்ப செட்டியார்

4 பூர்வபக்ஷம் சஷ்டி உற்சவம் :

ஸ்ரீ சுப்பிரமணியர் வள்ளி தெய்வானையுடன் வெள்ளி மயில் வாகனத்தில் எழுந்தருளல் :
ராங்கியம் நா. வ. சித. சிதம்பரம் செட்டியார்

1 பண்டு பணக்கட்டளை :-

தமிழ் வருஷப் பிறப்பு அன்று நகரேஸ்வரர் கோவில் சுவாமிகளுக்கு சிறப்பாக அபிஷேகம் அர்ச்சனை செய்து விபூதி பிரசாதம் அனுப்பி வைத்தல் : வலையபட்டி ஸ்ரீ சி. ந. சி. அழகம்மை ஆச்சி மூலதனமாக தந்த ரூ. 1000/- வட்டியில் இருந்து வருஷந்தோறும் நடைபெற்று வருகிறது.

2 சித்ரா பௌர்ணமி அன்னதானம் அபிஷேக கட்டளை :

புதுவயல் ராம. மீனாக்ஷி ஆச்சி பண்டு பணமாக தந்த ரூ. 3001/-ல் வரும் வட்டியிலிருந்து ஆண்டு தோறும் சித்ரா பௌர்ணமி அன்று சுவாமிகளுக்கு அபிஷேகம் ஆராதனை செய்தும் சத்திரத்தில் சாதுக்களுக்கு அன்னம் பாலிப்பு செய்தும் திருநீறு பிரசாதம் அனுப்பப் பெற்றும் வருகிறது.

3 தைப்பொங்கல் அன்னதானக் கட்டளை :

வலையபட்டி சி. ந. சி. அழகம்மை ஆச்சி பண்டு பணமாகத் தந்த ரூ 1000/-த்தை இந்தியன் பாங்கில் டெபாசிட் செய்து அதன் வட்டித் துகையிலிருந்து ஆண்டுதோறும் தைப் பொங்கலுக்கு சுவாமிகளுக்கு அபிஷேகம் ஆராதனை செய்து சாதுக்களுக்கு அன்னம் பாலிப்பும் செய்து, திருநீறு பிரசாதம் அனுப்பப்பெற்றும் வருகிறது.

4 அன்னபூரணி அம்பாளுக்கு தினசரி பஞ்சாமிர்த அபிஷேகம் :

நம் சத்திர அபிஷேகத்துடன் நடத்திவர தேவகோட்டை ஸ்ரீ சொர்ணகாளீஸ்வரர் யாத்திரர் ஸ்பெசலில் வந்த நகரத்தார்கள் மூலதனமாக தந்த ரூ 2001/-ஐ இந்தியன் ஓவர்சீஸ் பாங்கில் டெபாசிட் செய்து அதன் வட்டி வருமானத்திலிருந்து தினசரி பஞ்சாமிர்த அபிஷேகம் நடைபெற்று வருகிறது

5 விஸ்வேஸ்வரர் கற்பூரக் கட்டளை :

புதுவயல் அண. மீனுக்ஷி ஆச்சி ரு 500/- மூலதனமாக தந்ததை இந்தியன் ஓவர்சீஸ் பாங்கில் டெபாசிட் செய்து அதன் வட்டித்துகையை கற்பூரக் கட்டளைக்கு உபயோகம் செய்து வருகிறது.

6 கற்பூரக் கட்டளை -:

ராங்கியம் வ. மு. பெ. முத்துக்கருப்பி ஆச்சி ரு 300 /- மூலதனமாக தந்ததை இந்தியன் ஓவர்சீஸ் பாங்கில் டெபாசிட் செய்து அதன் வட்டித் துகையிலிருந்து கற்பூரக் கட்டளைக்கு உபயோகம் செய்து வருகிறது.

7 ஸ்ரீ விஸ்வேஸ்வரர் பால் அபிஷேக கட்டளை :

ராங்கியம் அ. மு. முத்துராமன் செட்டியார் மனைவி சீதை ஆச்சி ரூ. 1000 /- மூலதனமாக தந்ததை இந்தியன் ஓவர்சீஸ் பாங்கில் டிபாசிட் செய்து அதன் வட்டி துகையில் அபிஷேகத்துக்கு உபயோகம் செய்து வருகிறது.

8 விநாயக சதுர்த்தி பால் அபிஷேக கட்டளை :

குளிபிறை மு. ப. ஆ. முத்துபழநியப்ப செட்டியார் மூலதனமாக அனுப்பிய ரூ. 500/- ஐ வாரணுசி இந்தியன் பாங்கில் டெபாசிட் செய்து அதன் வட்டித்துகையிலிருந்து ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தியன்று வயி. சித. கல்யாணி ஆச்சி நினைவாக ஸ்ரீவிஸ்வேஸ்வரருக்கு பால் அபிஷேகம் நடைபெற்று வருகிறது.

9 இராமேஸ்வரம் கெங்கை அபிஷேக கட்டளை :

கண்டனூர் அ. வெ. சித. நா. ராம. ராமசாமி செட்டியார் மூலதனமாகத் தந்து ரூ. 9000/- இந்தியன் ஓவர்சீஸ் பாங்கில் டெபாசிட் செய்து அதிலிருந்து வரும் வட்டித் துகையில் இருந்து பிரயாகை சுத்த கெங்கை தீர்த்தம் டிரம் மூலம் இராமேஸ்வரத்திற்கு அனுப்பி வைத்து ஸ்ரீராமனுத சுவாமிக்கு தினசரி கெங்கை தீர்த்தம் அபிஷேகம் நடைபெற்றுவரச் செய்திருக்கிறது.

1 மஹா சிவராத்திரி அபிஷேக அன்னம் பாலிப்பு உபயம் : கோனாபட்டு ராம. முத்தளகப்ப செட்டியார் (மதுரை)

2 அன்னம் பாலிப்பு : தீபாவளியன்று காசிக்கு வந்திருக்கும் நகரத்தார்களுக்கு காலைப் பலகாரமும் காப்பியும் பகல் உணவு விருந்தும் நானூறு பேருக்கு சிறப்பான முறையில் நடை பெற்று வருகிறது.

3 காலைப்பலகாரத்துக்காகவும் சுவாமிகளுக்கு புதுத் துணி வாங்கவும் பனையப்பட்டி சு. சொ. சித. சிவனடியான் செட்டியார் ரூ. 750/– கொடுத்து வருகிறார்கள்.

4 பகல் உணவு விருந்துக்கு ராயவரம் பழ. ராம. அழகப்ப செட்டியார் அரிசியும் ரொக்கம் ரூ. 1000/ மும் கொடுத்து வருகிறார்கள்.

5 ஸ்ரீ விஸ்வேஸ்வரர் கோவில் கோபுரம் லைட்டுக்கு காரைக்குடி சா. நா. அ. சொ. அண்ணாமலை செட்டியார் அவர்களால் கரண்டு சார்ஜ் கொடுக்கப்பட்டு வருகிறது.

6 நித்திய கட்டளை : ஸ்ரீ காசி விஸ்வேஸ்வரருக்கு நம் நகரத்தார்கள் தொன்று தொட்டு செய்து வரும் அபிஷேக ஆராதனையுடன் நித்திய கட்டளைக்கு பணம் தந்தவர்களுக்கும் வருஷத்திற்கு ஒரு முறை அவர்கள் பெயர் நட்க்ஷத்திரம் சொல்லி அர்ச்சனை செய்து விபூதி பிரசாதம் போஸ்ட் மூலம் அனுப்பி வைத்து வருகிறது.

ப[illegible] நகரச்சத்திரம் :-

தைப்பூச விழா :- ஸ்ரீ விநாயகர் பெருச்சாளி வாகனத்திலும் ஸ்ரீ சுப்பிரமணியர் மயில் வாகனத்திலும் எழுந்தருளப்பெற்று ஊர்வலம் வந்தும் அன்னம் பாலிப்பும் நடைபெற்று வருகிறது.

ப[illegible] உத்திர விழா :- பாம்பே நகரத்தார்களால் சிறப்பாக [illegible]பிஷேக ஆராதனைகள் சுவாமி புறப்பாட்டு [illegible]ப்பும் நடைபெற்று வருகிறது.

அயோத்தியா நகரச்சத்திரம் :-

ஸ்ரீராம நவமி உற்சவம் :- ஸ்ரீ ராமர், லெட்சுமணர், சீதாதேவி, ஆஞ்சனேயர் ஆகிய மூர்த்திகளை அலங்காரம் செய்து சிறப்பாக உற்சவம் நடைபெற்று வருகிறது.

கல்க்கத்தா நகரத்தார் ஹவுஸ் - தைப்பூச விழா :-

கல்க்கத்தா நகரேஸ்வரர் கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிங்கார முருகேசருக்கு தைப்பூச பெருவிழா நம் சொசைட்டியின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. கல்க்கத்தா நகரத்தார்கள் அனைவரும் பங்கு கொண்டு விழாவை சிறப்புற நடத்துகிறார்கள்.

வருடா வருடம் சாமான்கள் நன்கொடை அனுப்பியவர்கள் விபரம்

நிர்.	ஊர்	பெயர்	சாமான் விபரம்
1	சென்னை	A. V. M. சாரிட்டீஸ்	சந்தனக் கட்டை
2	வலையப்பட்டி	அ. நா. அண்ணாமலை செட்டியார்	விபூதி மூட்டை
3	தேவகோட்டை	AN. AR. A. ர சு என்ற கருப்பஞ்செட்டியார்	ஏலக்காய்
4	மதுரை	ராம. முத்துப்பழனியப்ப செட்டியார்	1) விளக்குத் திரிநூல்
			2) சாப்பாட்டு சருகு இலை

ஒத...

...ம் நடைபெ...